# 8 டால்பின்®

உன்னால் முடியும்

புதிய பதிப்பு

# தமிழ்



அரசு புதிய பாடத்திட்டத்தின் படி
விடைக் குறிப்பு அடிப்படையில்
தயாரிக்கப்பட்ட சிறப்பு உரைநூல்

100/100 உறுதி



டால்பின் பப்ளிகேசன்ஸ்®

# டால்பின்®

## உன்னால் முடியும்

# தமிழ்

**புதிய பதிப்பு**

# 8

**அரசு புதிய பாடத்திட்டத்தின் படி**
**விடைக் குறிப்பு அடிப்படையில்**
**தயாரிக்கப்பட்ட சிறப்பு உரைநூல்**

✆ 98653 06197 | 89256 77710 | 99435 67646

**டால்பின் பப்ளிகேசன்ஸ்®**

தரமே எங்களின் தாரக மந்திரம்

239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.

Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.com

© All Copyrights reserved

விலை : ரூ.153

# பதிப்புரை

"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு"

ஆம்! உலகிற்கு எல்லாம் ஒளியாகத் திகழும் நம் தாய் மொழியாகிய தமிழைக் கற்பதில் நாம் அனைவரும் பெருமை கொள்வோம்.

அழகிய தமிழாய் எட்டாம் வகுப்பு பாடப் புத்தகத்தில் பொதிந்திருக்கக் கூடிய தமிழ் மகளை அணி செய்து, பாராட்டி, சீராட்டி, தேவதையாய் காட்சி பெறச் செய்து அளித்துள்ள "**டால்பின்**" தமிழ் உரை ஏட்டினைப் படித்து, அறிவில் சுடர் உடையவர்களாகத் திகழ்ந்து, தேர்வுகளைத் தைரியமுடன் எதிர் கொண்டு தமிழ்ப் பாடத்திலே மகத்தான வெற்றியினை பெறுவீர்களாக!

இந்த அழகிய உரை தாங்கிய ஏடானது, எளிமையும் இனிமையும் நிறைந்ததாக அமைந்திருக்கிறது. தங்களுடைய அறிவினைத் தூண்டி படைப்பாளர்களாக உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் இந்த ஏடு அமைந்திருக்கிறது. அழகிய மொட்டாக உருவாக்கப்பட்ட பாடப்புத்தகத்தினை, மலராக மலரச் செய்து அதன் மணத்தை நுகரச் செய்து அதன் பின் கனியாக சுவைப்பதற்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

உங்களுடைய தேடுதல் நேரத்தைக் குறைத்து தேவையான அனைத்தையும் இந்த ஏட்டின் உள்ளே புதைத்து வைத்துள்ளோம். படித்துப் பயன் பெறுக! தாய்நாட்டிற்கும், தாய் மொழிக்கும் என்றும் கடமையாற்ற முனைப்போடு இருங்கள்! நம் நாடு, நம் மொழி நமது இரு கண்கள் என்று உணர்க!

வாழ்க தமிழ்மொழி ! வளர்க தமிழ்த்திருநாடு !

வாழ்த்துகளுடன்

**டால்பின் பப்ளிகேசன்ஸ்**

## புத்தகங்களைப் பெறுவதற்கு

**மரியாதைக்குரிய தலைமையாசிரியர்கள் / ஆசிரியைகள் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கு !**

வணக்கம். **டால்பின் பப்ளிகேஷன்ஸ்** நிறுவனத்திற்கு தாங்கள் வழங்கி வருகின்ற பேராதரவிற்கு எங்களின் சிரம்தாழ்ந்த நன்றிகள். நீங்களே எங்களின் வளர்ச்சியின் அடித்தளம். தற்பொழுது தாங்கள் தங்களுக்குத் தேவையான புத்தகங்களைப் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றிப் பெற்றுக்கொள்ளலாம்.

**புத்தகங்களைப் பெற**

| | |
|---|---|
| அலைபேசி எண் (Mobile No) | **: 9865306197 / 8925677710 / 9943567646** |
| கட்செவி எண் (Whatsapp No) | **: 9345314146** |
| குறுஞ்செய்தி (Sms) | **: 9345330937** |
| வலைதளம் (Website) | **: www.kalvidolphin.com** |
| மின்னஞ்சல் (E-mail ID) | **: dolphin.pub2005@gmail.com** |

## பணம் செலுத்துவதற்கான விவரங்கள்

**கேட்பு வரைவோலை (D.D.) அல்லது காசோலை (Cheque) :**

டால்பின் பப்ளிகேஷன்ஸ் - ஸ்ரீவில்லிபுத்தூர் **(DOLPHIN PUBLICATIONS, SRIVILLIPUTTUR)** என்ற பெயருக்கு எடுத்து அனுப்பவும்.

## வங்கிக் கணக்கு விவரங்கள்

G Pay **63743 17883**

| **KARUR VYSYA BANK** | **CITY UNION BANK** |
|---|---|
| A/C No : 1804135000006000 | A/C No : 328109000204092 |
| IFSC CODE : KVBL0001804 | IFSC CODE : CIUB0000328 |
| BRANCH : Srivilliputtur | BRANCH : Srivilliputtur |
| **ICICI BANK** | **TAMILNADU MERCANTILE BANK** |
| A/C No : 446005500030 | A/C No : 328150310875103 |
| IFSC CODE : ICIC0004460 | IFSC CODE : TMBL0000328 |
| BRANCH : Srivilliputtur | BRANCH : Srivilliputtur |

**பணம் செலுத்திய பின் கீழ்க்கண்ட தொலைபேசி எண்களில் கண்டிப்பாக தகவல் தெரிவிக்கவும்**

**98653 06197, 89256 77710, 99435 67646**

# பொருளடக்கம்


| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| | மனப்பாடப் பகுதிகள் | | | vii |
| 1. | மொழி | தமிழ் இன்பம் | | 1 |
| | | கவிதைப்பேழை | தமிழ்மொழி வாழ்த்து * | 2 |
| | | | ஆழிக்கு இணை | 5 |
| | | உரைநடை உலகம் | தமிழ் வரிவடிவ வளர்ச்சி | 8 |
| | | விரிவானம் | சொற்பூங்கா | 13 |
| | | கற்கண்டு | எழுத்துகளின் பிறப்பு | 16 |
| 2. | இயற்கை | ஈடில்லா இயற்கை | | 24 |
| | | கவிதைப்பேழை | இயற்கையைப் போற்றுவோம் * | 25 |
| | | | பட்டமரம் | 28 |
| | | உரைநடை உலகம் | தமிழர் மருத்துவம் (நேர்காணல்) | 31 |
| | | விரிவானம் | வெட்டுக்கிளியும் சருகுமானும் | 36 |
| | | கற்கண்டு | மயங்கொலிகள் | 39 |
| | | வாழ்வியல் | திருக்குறள் * | 44 |
| 3. | கல்வி | கல்வி கரையில | | 49 |
| | | கவிதைப்பேழை | பாடறிந்து ஒழுகுதல் * | 50 |
| | | | புத்தியைத் தீட்டு | 53 |
| | | உரைநடை உலகம் | பல்துறைக் கல்வி | 56 |
| | | விரிவானம் | ஆன்ற குடிப்பிறத்தல் | 62 |
| | | கற்கண்டு | வினைமுற்று | 64 |

| இயல் | பொருளடக்கம் | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|
| 4. | கலை, அழகியல், பண்பாடு | குழலினிது யாழினிது | 75 |
| | கவிதைப்பேழை | திருக்கேதாரம் | 76 |
| | உரைநடை உலகம் | நாட்டுப்புறக் கைவினைக் கலைகள் | 79 |
| | விரிவானம் | தமிழர் இசைக்கருவிகள் | 85 |
| | கற்கண்டு | எச்சம் | 88 |
| | வாழ்வியல் | திருக்குறள் ✸ | 96 |
| 5. | நாகரிகம், தொழில், வணிகம் | வையம்புகழ் வணிகம் | 99 |
| | கவிதைப்பேழை | வளம் பெருகுக | 100 |
| | | கோணக்காத்துப்பாட்டு | 104 |
| | உரைநடை உலகம் | கொங்குநாட்டு வணிகம் | 108 |
| | விரிவானம் | காலம் உடன் வரும் | 114 |
| | கற்கண்டு | வினையால் அமையும் தொடர்கள் | 117 |
| 6. | நாடு, சமூகம் | பாருக்குள்ளே நல்ல நாடு | 127 |
| | கவிதைப்பேழை | சிங்கி பெற்ற பரிசு | 128 |
| | உரைநடை உலகம் | பாரத ரத்னா எம்.ஜி.இராமச்சந்திரன் | 131 |
| | விரிவானம் | ஒருவன் இருக்கிறான் | 136 |
| | கற்கண்டு | இடைச்சொல், உரிச்சொல் | 137 |

| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| 7. | அறம், தத்துவம், சிந்தனை | அறத்தால் வருவதே இன்பம் | | 145 |
| | | கவிதைப்பேழை | ஒன்றே குலம் ✸ | 146 |
| | | | மெய்ஞ்ஞான ஒளி | 149 |
| | | உரைநடை உலகம் | அயோத்திதாசர் சிந்தனைகள் | 152 |
| | | விரிவானம் | மனித யந்திரம் | 157 |
| | | கற்கண்டு | வேற்றுமை | 160 |
| | | வாழ்வியல் | திருக்குறள் ✸ | 168 |
| 8. | மனிதம், ஆளுமை | குன்றென நிமிர்ந்துநில் | | 172 |
| | | கவிதைப்பேழை | நோயும் மருந்தும் ✸ | 173 |
| | | உரைநடை உலகம் | சட்டமேதை அம்பேத்கர் | 176 |
| | | விரிவானம் | பால் மனம் | 181 |
| | | கற்கண்டு | புணர்ச்சி | 184 |
| | மாதிரி வினாத்தாள் | | | 193 |

# மனப்பாடப் பகுதிகள்

## தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி!
வாழிய வாழியவே!

வான மளந்தது அனைத்தும் அளந்திடு
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!

**- பாரதியார்**

---

## இயற்கையைப் போற்றுவோம்

மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்!
நாம நீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்
மேல்நின்று தான் சுரத்தலான்.

**- இளங்வோவடிகள்**

---

## திருக்குறள்

**நடுவுநிலைமை**

1. தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்.

**கூடா ஒழுக்கம்**

2. கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன
வினைபடு பாலால் கொளல்.

**கல்லாமை**

3. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.

**குற்றங்கடிதல்**

4. தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு.

**- திருவள்ளுவர்**

---

## பாடறிந்து ஒழுகுதல்

ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை
அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்
செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை
நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை
முறை எனப்படுவது கண்ஓடாது உயிர் வெளவல்
பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்

**- நல்லந்துவனார்**

---

## திருக்குறள்

**தெரிந்து வினையாடல்**

1. இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.

**சொல்வன்மை**

2. கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.

3. சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து.

**- திருவள்ளுவர்**

---

## ஒன்றே குலம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்ம்மினே

படமாடக் கோயில் பகவற்குஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்குஅங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்குஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்குஅது ஆமே

**- திருமூலர்**

---

## திருக்குறள்

**படைச்செருக்கு**

1. கான முயல்எய்த அம்பினில் யானை
   பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

**நட்பு**

2. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
   பண்புடை யாளர் தொடர்பு.

**பண்புடைமை**

3. பண்புடையார்ப் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்
   மண்புக்கு மாய்வது மன்.

**- திருவள்ளுவர்**

## நோயும் மருந்தும்

பேர்தற்கு அரும்பிணி தாம்இவை அப்பிணி
தீர்தற்கு உரிய திரியோக மருந்துஇவை
ஓர்தல் தெளிவோடு ஒழுக்கம் இவையுண்டார்
பேர்த்த பிணியுள் பிறவார் பெரிதின்பமுற்றே. (பா.116)



11






எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே!

- பாரதிதாசன்

# இயல் ஒன்று

# தமிழ் இன்பம்



## கற்றல் நோக்கங்கள்

- செய்யுளைப் படித்து அதன் நயங்களைப் போற்றும் திறன் பெறுதல்
- தமிழ்மொழியின் செழுமை குறித்து ஆற்றலுடன் உரையாடுதல்
- தமிழ் எழுத்துகளின் வளர்ச்சி நிலைகளை அறிதல்
- ஓரெழுத்து ஒரு மொழியை அடிப்படையாகக் கொண்டு சொல்லாட்சித் திறனை வளர்த்தல்
- எழுத்துகளின் பிறப்பு முறைகளை அறிந்து உரிய முறையில் ஒலித்தல்

கவிதைப்பேழை

இயல் ஒன்று

# தமிழ்மொழி வாழ்த்து

| நோக்கம் | |
|---|---|
| | ➢ மொழி ஒரு நாட்டின் சிறப்பு என்பதை உணர்தல்<br>➢ தமிழின் பெருமையை உணர்ந்து போற்றுதல்<br>➢ மொழியை நேசித்த கவிஞர்களைப் பற்றி அறிதல் |

## நூல் வெளி



கவிஞர், எழுத்தாளர், இதழாளர், சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளர், விடுதலைப் போராட்ட வீரர் எனப் பன்முக ஆற்றல் கொண்டவர் **சி.சுப்பிரமணிய பாரதியார். இந்தியா, விஜயா** முதலான இதழ்களை நடத்தி விடுதலைப் போருக்கு வித்திட்டவர். கவிதைகள் மட்டுமின்றி, **சந்திரிகையின் கதை, தராசு** உள்ளிட்ட உரைநடை நூல்களையும் வசனகவிதைகளையும் சீட்டுக்கவிகளையும் எழுதியவர். **சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த் தேனீ, புதிய அறம் பாட வந்த அறிஞன், மறம் பாட வந்த மறவன்** என்றெல்லாம் **பாரதிதாசன்** இவரைப் புகழ்ந்துள்ளார்.

இப்பாடல் **பாரதியார் கவிதைகள்** என்னும் தொகுப்பில் **தமிழ்மொழி வாழ்த்து** என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

## சொல்லும் பொருளும்

1. நிரந்தரம் - நிலையாக, என்றும் அழியாமல், காலம் முழுமையும்
2. வைப்பு - நிலப்பகுதி
3. சூழ்கலி - சூழ்ந்துள்ள அறியாமை இருள்
4. வண்மொழி - வளமிக்கமொழி
5. இசை - புகழ்
6. தொல்லை - பழமை, துன்பம்
7. தன்மணம் - தன்வாசனை
8. கலி - இருள், அறியாமை
9. துலங்குக - மேன்மையடைக
10. வளர்மொழி - வளர்ந்து கொண்டிருக்கும் மொழி

## மதிப்பீடு (பக்கம்.4)

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ..................**

அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி **[அ) வைப்பு]**

2. **‘என்றென்றும்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................**

அ) என் + றென்றும் ஆ) என்று + என்றும் இ) என்றும் + என்றும் ஈ) என் + என்றும் **[ஆ) என்று + என்றும்]**

3. **‘வானமளந்தது’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................**

அ) வான + மளந்தது ஆ) வான் + அளந்தது

இ) வானம் + அளந்தது ஈ) வான் + மளந்தது **[இ) வானம் + அளந்தது]**

4. **அறிந்தது + அனைத்தும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..................**

அ) அறிந்ததுஅனைத்தும் ஆ) அறிந்தனைத்தும்

இ) அறிந்ததனைத்தும் ஈ) அறிந்துனைத்தும் **[இ) அறிந்ததனைத்தும்]**

5. **வானம் + அறிந்த என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..................**

அ) வானம்அறிந்து ஆ) வான்அறிந்த இ) வானமறிந்த ஈ) வான்மறிந்த **[இ) வானமறிந்த]**

## குறுவினா

1. **தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?**
   - ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தமிழ்மொழி புகழ் கொண்டு வாழ்கிறது.

2. **தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?**
   - தமிழ்மொழியானது வானம்வரை உள்ளடங்கியுள்ள பொருண்மைகளை (பொருள்களின் தன்மை, கருத்து) எல்லாம் அறிந்து வளர்கிறது.

## சிறுவினா

1. **தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.**
   - தமிழ்மொழி எக்காலத்தும் நிலைபெற்று நிற்க வேண்டும். அதனாலும்
   - ஆகாயத்தால் சூழப்பட்ட இவ்வுலகத்தை அறிந்து உரைக்கும் வளமானமொழி தமிழ்மொழி. அதனாலும்
   - ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து, புகழால் நிரம்பி நிற்கும் மொழி தமிழ்மொழி. அதனாலும்
   - எல்லாவற்றிற்கும் மேலாக எங்கள் தாய்மொழி தமிழ்மொழி. அதனாலும் உலகம் உள்ளவரை தமிழ்மொழி வாழ்தல் வேண்டும் என்று பாரதியார் வாழ்த்துகிறார்.

## சிந்தனை வினா

1. **பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் என்ன?**
   - தமிழ்மொழி உலகத்தில் உள்ள அனைத்துக் கருத்துகளையும் அறிந்து உரைப்பதாலும்
   - அண்டவெளியில் உள்ள அனைத்துத் தன்மைகளையும் அறிந்து தெரிவிப்பதாலும்
   - உலகம் முழுவதும் இலக்கிய வளத்தைப் பரவச்செய்து புகழ்கொண்டிருப்பதாலும்
   - அறியாமை இருளை நீக்கி, ஒளிமிக்க பாரதத்தை உருவாக்கியதாலும்
   - இன்றளவும் எண்ணற்ற இலக்கியங்களால் நாள்தோறும் பூத்துக்குலுங்கும் அழகிய மொழி சோலையாய் திகழ்பவள் நம் தமிழ்அன்னை. ஆகையால் அன்னையாகிய என் தமிழ்மொழி என்றென்றும் வளமான (வண்) மொழி என்று பாரதியார் அழைக்கிறார்.

# கூடுதல் வினாக்கள்

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. வானம் அளந்தது அனைத்தும் அளந்திடு ______ வாழியவே. **[வண்மொழி]**
2. ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து, புகழ்க்கொண்ட ______ வாழ்க! **[தமிழ்மொழி]**
3. இந்தியா மற்றும்______ இதழினை சி.சுப்பிரமணிய பாரதியார் நடத்தி வந்தார். **[விஜயா]**
4. பாரதியார் எழுதிய உரைநடை நூல் ______ ஆகும். **[தராசு]**
5. ''செந்தமிழ்த் தேனீ'' என்று அழைக்கப்படுபவர் ______. **[பாரதியார்]**

## ஓரிரு வரிகளில் விடையளி

1. **ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி**
   **இசைகொண்டு வாழியவே! - இப்பாடலைப்பாடியவர் யார்?**
   - இப்பாடலைப் பாடியவர் பாரதியார்.

2. **வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி**
   **வாழிய வாழியவே! -- இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?**
   - பாரதியார் கவிதைகள் என்னும் நூல் தொகுப்பில் இப்பாடல் இடம் பெற்றுள்ளது.

3. **வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி**
   **வாழிய வாழியவே! -- இப்பாடல் வரிகள் எந்த தலைப்பின் கீழ் இடம் பெற்றுள்ளது?**
   - இப்பாடல் வரிகள் ''தமிழ்மொழி வாழ்த்து'' என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

4. **பாரதியாரைச் 'சிந்துக்குத் தந்தை' என்று புகழ்ந்தவர் யார்?**
   - பாரதியாரை சிந்துக்குத் தந்தை என்று புகழ்ந்தவர் பாரதிதாசன் ஆவார்.

5. **பாரதிதாசன் பாரதியாரை எவ்வாறெல்லாம் புகழ்ந்துரைக்கிறார்?**
   - சிந்துக்குத்தந்தை
   - செந்தமிழ்த் தேனீ
   - புதிய அறம்பாட வந்த அறிஞன்
   - மறம் பாட வந்த மறவன் என்றெல்லாம் புகழ்ந்துரைக்கிறார்.

6. **பாரதியாரின் இயற்பெயர் என்ன?**
   - பாரதியாரின் இயற்பெயர் சி.சுப்பிரமணியன் ஆகும்.

7. **விடுதலைப் போருக்காக சி.சுப்பிரமணிய பாரதியார் நடத்திய இதழ்களைக் குறிப்பிடுக.**
   - இந்தியா, விஜயா ஆகியவை விடுதலைப் போருக்காக சி.சுப்பிரமணிய பாரதியார் நடத்திய இதழ்களாகும்.

## சிறுவினா

1. சி.சுப்பிரமணிய பாரதியார் - குறிப்பு வரைக.

| | |
|---|---|
| இயற்பெயர் | : சி.சுப்பிரமணியன் |
| பெற்றோர் | : சின்னசாமி, இலக்குமியம்மையார் |
| ஊர் | : எட்டயபுரம் |
| பன்முக ஆற்றல் | : கவிஞர், எழுத்தாளர், இதழாளர், சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளர், விடுதலைப் போராட்ட வீரர் |
| நடத்திய இதழ்கள் | : இந்தியா, விஜயா |
| எழுதிய உரைநடை நூல்கள் | : சந்திரிகையின் கதை, தராசு |
| புகழாரம் | : சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த்தேனீ, புதிய அறம் பாட வந்த அறிஞன், மறம் பாட வந்த மறவன் |

கவிதைப்பேழை

இயல் ஒன்று

# ஆழிக்கு இணை

## நோக்கம்

- தமிழ் மொழியின் செழுமை குறித்து ஆற்றலுடன் உரையாடுதல்
- தமிழின் சிறப்பை உணர்ந்து போற்றுதல்.

## நூல் வெளி



தமிழழகனாரின் இயற்பெயர் **சண்முகசுந்தரம்** ஆகும். இவர் **சந்தக்கவிமணி** என்று குறிப்பிடப்படுகிறார். இவர் இளம்வயதிலேயே இலக்கணப் புலமையும் செய்யுள் இயற்றும் ஆற்றலும் பெற்றவர்; பன்னிரண்டு சிற்றிலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.

**தனிப்பாடல் திரட்டு** (ஐந்தாம் பகுதி - கழகப் பதிப்பு) என்னும் நூலிலிருந்து இப்பாடல் எடுத்தாளப்பட்டுள்ளது. தனிப்பாடல் திரட்டு என்பது புலவர் பலரின் பாடல்களின் தொகுப்பு ஆகும்.

## சொல்லும் பொருளும்

1. துய்ப்பதால் - கற்பதால், தருதலால்
2. மெத்த வணிகலம் - அணிகலன், பெரிய வணிகக் கப்பல்
3. மேவலால் - பொருந்துதலால், பெறுதலால்
4. நித்தம் - நாள்தோறும்
5. ஆழி - கடல்

## மதிப்பீடு (பக்கம்.7)

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **தமிழ்த்தாய் ஐம்பெருங்காப்பியங்களை ......... அணிந்துள்ளாள்.**

அ) மாலையாக ஆ) ஆடையாக இ) அணிகலன்களாக ஈ) மகுடமாக

**[இ) அணிகலன்களாக]**

2. **பெரிய கப்பல்கள் .......... மீது செல்லும்.**

அ) ஊழி ஆ) ஆழி இ) நாழி ஈ) தாழி **[ஆ) ஆழி]**

3. **'முத்தமிழ்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .........**

அ) மூன்று + தமிழ் ஆ) முத்து + தமிழ் இ) மு + தமிழ் ஈ) முத் + தமிழ்

**[அ) மூன்று + தமிழ்]**

4. **'தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காக்கிறது' - இத்தொடரில் தன் என்னும் சொல் ........ குறிக்கிறது.**

அ) அணிகலனைக் ஆ) கடலைக் இ) கப்பலைக் ஈ) தமிழைக் **[ஆ) கடலைக்]**

### பாடலின் பொருள் உணர்ந்து, தொகைச் சொற்களை விரித்து எழுதுக.

1. **முத்தமிழ்** : மூன்று + தமிழ் - இயல், இசை, நாடகம்.
2. **முச்சங்கம்** : மூன்று + சங்கம் - முதல் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம்.
3. **முச்சங்கு** : மூன்று + சங்கு - வெண் சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம்.

### குறுவினா

1. **தமிழ் யாரால் காக்கப்பட்டதாகத் தமிழழகனார் கூறுகிறார்?**
   - சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப் புலவர்களால் தமிழ் காக்கப்பட்டதாகத் தமிழழகனார் கூறுகிறார்.

2. **இரட்டுறமொழிதல் அணி என்பது யாது?**
   - ஒரு சொல் அல்லது தொடர் இருபொருள் தருமாறு அமைவது இரட்டுற மொழிதல் அணி ஆகும்.
   - இதனைச் சிலேடை என்றும் கூறுவர்.

### சிறுவினா

**தமிழையும் கடலையும் ஒப்பிட்டுத் தமிழழகனார் கூறுவன யாவை?**

- தமிழ் இயல், இசை, நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது.
- முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது.
- ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது.
- சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப் புலவர்களால் காக்கப்பட்டது.
- கடல் முத்துகளைத் தருகிறது.

- வெண் சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது.
- மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது.
- தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காக்கிறது.

## சிந்தனை வினா

**தமிழுக்கும் கடலுக்கும் உள்ள ஒற்றுமைகளாக நீங்கள் கருதுவன யாவை?**

தமிழுக்கும் கடலுக்கும் உள்ள ஒற்றுமைகளாக நாங்கள் கருதுவன

- தமிழும் கடலும் பரந்து விரிந்து உள்ளன.
- கடல் பல வளங்களைத் தன்னுள் கொண்டுள்ளது போல தமிழும் தன்னுள் பல சொல் வளங்களைக் கொண்டுள்ளது.
- கடல் பலர் பயணம் செய்வதற்கு உதவுவது போல் தமிழும் தன்னோடு பலர் பயணிக்க உதவுகிறது.
- தமிழுக்கும் மூன்றெழுத்து கடலுக்கும் மூன்றெழுத்து.
- கடலுக்கும் எல்லையில்லை. தமிழுக்கும் எல்லையில்லை.

## கற்பவை கற்றபின் (பக்கம்.7)

1. **இருபொருள் தரும் சொற்கள் சிலவற்றை எழுதி, அவற்றின் இரு பொருள்களையும் எழுதுக.** (எ.கா.) **மாலை - மலர்மாலை, அந்திப்பொழுது**
   - திங்கள் - கிழமை, நிலவு
   - மதி - அறிவு, நிலவு
   - ஆழி - மோதிரம், கடல்
   - படி - படித்தல், வாயில்படி
   - ஓடு - ஓடுதல், வீட்டின் கூரை
   - ஆடு - ஆடுதல், ஆடு
   - நகை - நகைத்தல், அணிகலன்

# கூடுதல் வினாக்கள்

## கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. இரட்டுறமொழிதல் ............... எனவும் வழங்கப்படும் **[சிலேடை]**
2. தமிழழகனாரின் இயற்பெயர் ................ **[சண்முகசுந்தரம்]**
3. முத்தமிழ் என்பது இயல், ............... நாடகம் **[இசை]**
4. சந்தக் கவிமணி என்று குறிப்பிடப்படுபவர் ............... **[தமிழழகனார்]**
5. தமிழழகனார் ............... சிற்றிலக்கிய நூல்களைப் படைத்துள்ளார். **[பன்னிரண்டு]**

## குறுவினா

1. **மூன்று வகை சங்குகள் யாவை?**
   - மூன்று வகை சங்குகள் - வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம்

2. **நித்தம், ஆழி இவற்றின் பொருள்களை எழுதுக.**
   - நித்தம் - நாள்தோறும்
   - ஆழி - கடல்

உரைநடை உலகம்

# இயல் ஒன்று

# தமிழ் வரிவடிவ வளர்ச்சி

| நோக்கம் | |
|---|---|
| | ➢ தமிழ் எழுத்துகளின் வளர்ச்சி நிலைகளை அறிதல்<br>➢ தமிழ் எழுத்துகளின் வளர்ச்சி நிலையும் எழுத்துகளின் உருமாற்றத்தையும் புரிந்துகொள்ளுதல்<br>➢ தமிழ் எழுத்துகளின் சீர்திருத்தம் குறித்து உணருதல். |

## மதிப்பீடு (பக்கம்.12)

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப்பெற .................. காரணமாக அமைந்தது.**

   அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை இ) அச்சுக்கலை ஈ) நுண்கலை **[அ) ஓவியக்கலை]**

2. **வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து .................. என அழைக்கப்படுகிறது.**

   அ) கோட்டெழுத்து ஆ) வட்டெழுத்து இ) சித்திர எழுத்து ஈ) ஓவிய எழுத்து **[ஆ) வட்டெழுத்து]**

3. **தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ..................**

   அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார் இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்

   **[ஆ) தந்தை பெரியார்]**

## கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் ................. என அழைக்கப்பட்டன.

**[கண்ணெழுத்துகள்]**

2. எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் ................. **[வீரமாமுனிவர்]**

## குறுவினா

1. **ஓவிய எழுத்து என்றால் என்ன?**
   - தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரிவடிவத்தை ஓவிய எழுத்து என்பர்.

2. **ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?**
   - ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து நிலை என்பர்.

3. **ஓலைச்சுவடிகளில் நேர்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம் என்ன?**
   - ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதும்பொழுது நேர்கோடுகள், புள்ளிகள் இட்டு எழுதினால் ஓலைச்சுவடி கிழிந்துவிடும் என்ற காரணத்தால் வளைகோடுகளைப் பயன்படுத்தி எழுதினர்.

4. **வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக.**
   - எகர ஒகர எழுத்துகளில் நெடில் எழுத்திற்கு புள்ளியிட்டு எழுதினர். இப்புள்ளியைக் களைந்து மாற்றம் ஏற்படுத்தியவர் வீரமாமுனிவர்.
   - ‘எ’ என்னும் எழுத்திற்குக் கீழ்க்கோடிட்டு ‘ஏ’ என்னும் எழுத்தை நெடிலாக குறிப்பிட்டு மாற்றம் ஏற்படுத்தினார்.
   - ஒ என்னும் எழுத்திற்குச் சுழி இட்டு ஓ என்னும் நெடில் எழுத்தாக மாற்றம் ஏற்படுத்தினார்.

## சிறுவினா

1. **எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.**
   - ஓலைச் சுவடிகளிலும் கல்வெட்டுகளிலும் புள்ளிபெறும் எழுத்துகளை எழுதும்போது அவை சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர்.
   - ஓலைச் சுவடிகளில் நிறுத்தற்குறிகளும் பத்தி பிரித்தலும் கிடையாது.
   - புள்ளி இடப்பட வேண்டிய எழுத்துகள் புள்ளி இடம்பெறாமல் இருந்தால் படிப்பவர், மெய்யா? உயிர்மெய்யா? குறிலா? நெடிலா? என உணருவதில் கடினம்.
   - இதனால் படிப்பவருக்குப் பொருள் விளங்கிக்கொள்ள இயலவில்லை.
   - எனவே எழுத்துச் சீர்திருத்தம் வேண்டியதாயிற்று.

2. **தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.**

| பழைய வடிவம் | புதிய வடிவம் |
|---|---|
| ˙எ | ஏ |
| க. | கா |
| ..க | கை |
| கெ.. | கௌ |
| ப் | ம |

## நெடுவினா

1. **எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.**

- ➢ மனிதன் தனக்கு எதிரே இல்லாதவர்களுக்கும் பின்னால் வரும் தலைமுறையினருக்கும் தனது கருத்துகளைத் தெரிவிக்க விரும்பினான்.
- ➢ அதற்காகப் பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் தன் எண்ணங்களைக் குறியீடுகளாகப் பொறித்து வைத்தான். இதுவே எழுத்து வடிவத்தின் தொடக்க நிலை ஆகும்.
- ➢ தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளில் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரி வடிவத்தை ஓவிய எழுத்து என்பர்.
- ➢ அடுத்ததாக ஒவ்வொரு வடிவமும் அவ்வடிவத்துக்கு உரிய முழு ஒலியாகிய சொல்லைக் குறிப்பதாக மாறியது. அதன்பின் ஒவ்வொரு வடிவமும் அச்சொல்லின் ஓசையைக் குறிப்பதாயிற்று.
- ➢ இவ்வாறு ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து நிலை என்பர்.
- ➢ கல்வெட்டுகள், செப்பேடுகளில் காணப்படும் வரிவடிவங்களை வட்டெழுத்து, தமிழெழுத்து என இருவகையாகப் பிரிப்பர்.
- ➢ அச்சுக்கலை தோன்றிய பிறகே தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற்றுள்ளன.
- ➢ இதுவே எழுத்துகளின் தோற்றம் ஆகும்.

## சிந்தனை வினா

1. **தற்காலத் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகளாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.**

- ➢ சைகை மொழி, வரிவடிவமாக, ஒலிவடிவமாக பலரது கடின உழைப்பால் தலைசிறந்த மொழியாக நிற்கிறது.
- ➢ மொழியால் இலக்கியங்கள் பெருகி, உலக அளவில் நாம் புகழ் அடைந்து நிற்கிறோம்.
- ➢ இத்தகைய அருமைமிகு நம் தாய்மொழியைக் கண்ணெனக் காத்து போற்றி வருதல் அவசியமாகும்.
- ➢ பிறமொழிக்குத் தரும் முக்கியத்தைப் புறந்தள்ளி, அனைத்து இடங்களிலும் தமிழ்மொழியைக் கையாண்டு மொழி மேலும் சிறக்க உறுதுணையாக இருப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

## தெரிந்து தெளிவோம் (பக்கம்.9)

**கல்வெட்டுகளில் உள்ள எழுத்துகளின் அமைப்பு**

1. 'ஸ' எனும் வடமொழி எழுத்து காணப்படுகிறது.
2. மெய்யைக் குறிக்கப் புள்ளி பயன்படுத்தவில்லை.
3. எகர, ஒகரக் குறில் நெடில் வேறுபாடில்லை.

தமிழ் மொழியை எழுத இருவகை எழுத்துகள் வழக்கிலிருந்தன என அறிகிறோம். அரச்சலூர் கல்வெட்டே இதற்குச் சான்றாகும். இக்கல்வெட்டில் தமிழ் எழுத்தும் வட்டெழுத்தும் கலந்து எழுதப்பட்டுள்ளன.

## பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் (பக்கம்.11)

| வ.எண். | பழைய வடிவம் | சீர்திருத்த வடிவம் | சான்று |
|---|---|---|---|
| 1. | ணா | ணா | அண்ணா - அண்ணா |
| 2. | ணை | ணை | அணை - அணை |
| 3. | ணொ | ணொ | மண்ணொடு - மண்ணொடு |
| 4. | ணோ | ணோ | கண்ணோடு - கண்ணோடு |
| 5. | லை | லை | தலை - தலை |
| 6. | ளை | ளை | களை - களை |
| 7. | றா | றா | சிறார் - சிறார் |
| 8. | றொ | றொ | மற்றொரு - மற்றொரு |
| 9. | றோ | றோ | காற்றோடு - காற்றோடு |
| 10. | னா | னா | மன்னா - மன்னா |
| 11. | னை | னை | வினை - வினை |
| 12. | னொ | னொ | என்னொடு - என்னொடு |
| 13. | னோ | னோ | என்னோடு - என்னோடு |

## வீரமாமுனிவரின் எழுத்துச் சீர்திருத்தம் (பக்கம்.11)

| ெஎ | எ | ெஒ | ஓ | கெ் | கெ | கொ் | கொ |
|---|---|---|---|---|---|---|---|
| எ | ஏ | ஒ | ஓ | கெ | கே | கொ | கோ |

## கற்பவை கற்றபின் (பக்கம்.11)

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து, அதில் இடம்பெற்றுள்ள பழைய வரிவடிவச் சொற்களை எடுத்து எழுதி, அவற்றை இன்றைய வரிவடிவில் மாற்றி எழுதுக.**

சுற்றுப்புறச் சூழ்நிலைப் பிரச்சனைகள் பற்றிய இந்தியாவின் கவலை பல்லாண்டு காலமாக வளர்ந்தே வருகிறது.

'மனிதன் ஏழ்மையிலே இருக்கும்போது சத்தற்ற உணவினாலும், நோயினாலும் அச்சுறுத்தப்படுகிறான். பலவீனனாக இருப்பவன் போருக்கு அஞ்சுகிறான்; செல்வந்தனாக இருப்பவனே தன் கொழுத்த செல்வத்தால் உண்டான அசுத்தத்திற்கு அஞ்சுகிறான்' என்றெல்லாம் திருமதி இந்திராகாந்தி அன்றைக்கு ஆற்றிய உரை நாம் நினைவு கூரத்தக்கது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. **சூழ்நிலே** | - | சூழ்நிலை | 7. **பலவீனஞகை** | - | பலவீனனாக |
| 2. **பிரச்னேகள்** | - | பிரச்சனைகள் | 8. **அஞ்சுகிருன்** | - | அஞ்சுகிறான் |
| 3. **கவலே** | - | கவலை | 9. **செல்வந்தஞகை** | - | செல்வந்தனாக |
| 4. **உணவிஞலும்** | - | உணவினாலும் | 10. **இருப்பவஞே** | - | இருப்பவனோ |
| 5. **நோயிஞலும்** | - | நோயினாலும் | 11. **அஞ்சுகிருன்** | - | அஞ்சுகிறான் |
| 6. **அச்சுறுத்தப்படுகிருன்** | - | அச்சுறுத்தப்படுகிறான் | 12. **நினேவு** | - | நினைவு |

# கூடுதல் வினாக்கள்

## கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. மனிதன் தன் .......... பிறருக்கு அறிவிக்க மொழியைக் கண்டுபிடித்தான். **[கருத்தைப்]**
2. எழுத்துகளின் .......... வடிவங்கள் மொழிக்கு மொழி வேறுபடுகின்றன. **[வரி]**
3. தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரி வடிவத்தை .......... என்பர். **[ஓவிய எழுத்து]**
4. கல்வெட்டுகள் .......... நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. **[கி.மு. (பொ.ஆ.மு.) 3]**
5. செப்பேடுகள் .......... நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. **[கி.மு. (பொ.ஆ.மு) 7]**
6. கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் .......... என்று அழைக்கப்படுகின்றன. **[கண்ணெழுத்துகள்]**
7. பாறைகளில் எழுத .......... கோடுகள் பயன்படுத்தப்பட்டன. **[நேர்க்]**
8. ஓலைகளில் எழுத .......... கோடுகள் பயன்படுத்தப்பட்டன. **[வளை]**
9. க. இவ்வாறு எழுதினால் அது .......... **[கா நெடிலாகும்]**
10. ஐகார எழுத்துகளைக் குறிப்பிட எழுத்துகளின் முன் .......... புள்ளிகள் இட்டனர். **[இரட்டைப்]**
11. மகர எழுத்தைக் குறிப்பிட, பகர எழுத்தின் .......... புள்ளி இட்டனர். **[உள்ளே]**
12. எகர வரிசை எழுத்திற்குப் பின்னால் இரண்டு புள்ளிகள் இட்டால் அவை .......... வரிசை எழுத்துகளாகக் கருதப்படும். **[ஔகார]**
13. தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் .......... ஆவார். **[வீரமாமுனிவர்]**
14. இருபதாம் நூற்றாண்டில் எழுத்துச் சீர்திருத்தம் கொண்டுவந்தவர் .......... ஆவார். **[பெரியார்]**

## ஓரிரு வரிகளில் விடையளி

1. **தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவங்களை எங்கெல்லாம் காணலாம்?**
   - கோவில்களிலுள்ள கருங்கல் சுவர்களிலும், செப்பேடுகளிலும் தமிழ் எழுத்துகளின் பழைய வரிவடிவங்களைக் காணலாம்.

2. **கல்வெட்டு மற்றும் செப்பேடுகளில் காணப்படும் வரி வடிவ எழுத்துகளை என்னவென்று பிரிப்பர்?**
   - கல்வெட்டு மற்றும் செப்பேடுகளில் காணப்படும் வரி வடிவ எழுத்துகளை வட்டெழுத்து, தமிழெழுத்து என இருவகையாகப் பிரிப்பர்.

3. **வட்டெழுத்து என்பது யாது?**
   - ➢ வட்டெழுத்து என்பது வளைந்த கோடுகளால் அமைந்த மிகப் பழைய தமிழ் எழுத்து ஆகும்.

4. **வட்டெழுத்துகள் எங்கு இடம்பெற்றுள்ளன?**
   - ➢ எட்டு முதல் பதினொன்றாம் நூற்றாண்டுவரை சேர மற்றும் பாண்டியர்களின் சாசனங்களில் வட்டெழுத்துகள் இடம்பெற்றுள்ளன.

5. **பழைய தமிழெழுத்துகள் எந்த நூற்றாண்டு முதல் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன?**
   - ➢ பதினொன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு கிடைக்கும் கல்வெட்டுகளில் பழைய தமிழெழுத்துகள் காணப்படுகின்றன.

6. **பழங்காலத்தில் எவற்றில் எழுதினர்?**
   - ➢ பழங்காலத்தில் கற்பாறை, செப்பேடு, ஓலை இவற்றில் எழுதினர்.

## சிந்தனை வினா

1. **தமிழை உரோமன் எழுத்துருவில் எழுதுவதால் தமிழுக்கு ஏற்படும் தீங்குகள் குறித்து கலந்துரையாடுக.**
   - ➢ சிவா : தமிழ்மொழியின் பெருமையைப்பற்றி பேசுகிறாயே! எண்களுக்கு அதாவது ஒன்று, இரண்டிற்கு எழுத்துருக்கள் உண்டா?
   - ➢ சக்தி : எண்களுக்கும் தமிழ்மொழியில் உருக்கள் உண்டு. எப்படி 1, 2, 3.. என உரோமன் எழுத்துகள் உண்டோ அதுபோல தமிழிலும் எண்களுக்கான எழுத்துருவரிசைகள் உண்டு.
   - ➢ சிவா : ஒவ்வொரு எண்ணிற்கும் உரோமன் எழுத்தில் தான் எழுதுதல் வேண்டும். தமிழில் எண்கள் இல்லை என நான் தவறாக கருதிவிட்டேன்.
   - ➢ சக்தி : நீ மட்டுமல்ல தமிழ் அறிந்த பலரும் எண்களுக்கு எழுத்தில்லை என்று தவறாகப் புரிந்துக்கொண்டு, நம் தமிழின் சிறப்பை மறந்துவிடுகின்றனர். ஒன்றுக்கு 'க' என்றும் இரண்டிற்கு 'உ' என்றும் எழுத்து வடிவம் உண்டு.
   - ➢ சிவா : நீ சொல்வது சரிதான். இதை மறந்து அனைவரும் உரோமன் எழுத்துருவைப் பயன்படுத்தினால், காலப்போக்கில் தமிழ் எண் எழுத்து மறைந்துவிடக்கூடும். மறந்துவிடக்கூடும்.
   - ➢ சக்தி : ஆம் சிவா! எனவே நாம் அனைவரும் முடிந்தவரை எண்களுக்குரிய தமிழ் வரிவடித்தை எழுதப் பழகுவோம். தமிழ்மொழியைப் போற்றுவோம்.

---

விரிவானம்

இயல் ஒன்று

# சொற்பூங்கா

**நோக்கம்**

- ➢ ஓரெழுத்து ஒரு மொழியை அடிப்படையாகக் கொண்டு சொல்லாட்சித் திறனை வளர்த்தல்.
- ➢ ஓரெழுத்து ஒரு மொழியைத் தெளிவாக கற்றல்.
- ➢ தமிழின் சொல்லாட்சியைக் கண்டு வியத்தல்.

## நூல் வெளி

**செந்தமிழ் அந்தணர்** என்று அழைக்கப்படும் **இரா.இளங்குமரனார்** பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர். நூலாசிரியர், இதழாசிரியர், உரையாசிரியர், தொகுப்பாசிரியர் எனப் பன்முகத் திறன் பெற்றவர். **இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம்** உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார். **தேவநேயம்** என்னும் நூலைத் தொகுத்துள்ளார். திருச்சிக்கு அருகில் அல்லூரில் **திருவள்ளுவர் தவச்சாலையும், பாவாணர் நூலகமும்** அமைத்துள்ளார்.

இவரது **தமிழின் தனிப்பெருஞ்சிறப்புகள்** என்னும் நூலிலிருந்து செய்திகள் தொகுத்து இங்குத் தரப்பட்டுள்ளன.

## மதிப்பீடு (பக்கம்.16)

**தமிழில் ஓரெழுத்து ஒரு மொழிகளின் பெருக்கம் குறித்து இளங்குமரனார் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

- தமிழில் ஓரெழுத்து ஒருமொழி மொத்தம் 42 எழுத்துகள்
- அதில் உயிர் வரிசையில் ஆறு எழுத்துகளும், ம வரிசையில் ஆறு எழுத்துகளும், த, ப, ந வரிசைகளில் ஐந்து ஐந்து எழுத்துகளும் (15) க, ச, வ என்னும் வரிசைகளில் நான்கு நான்கு எழுத்துகளும் (12) ய வரிசையில் ஒன்றும் இவை நெடில்கள் ஓரெழுத்து ஒருமொழி நாற்பது.
- நொ, து குறிலைச் சேர்த்து 42 எழுத்துகள்.
- பூ, கா இரண்டும் ஓரெழுத்து ஒருமொழி. இரண்டும் சேர்ந்து ‘பூங்கா’ என்னும் கலைச்சொல் உருவாகியது.
- மா என்பது ‘பெரிய’ என்றும் ‘விலங்கு’ என்றும் பொருள் தரும் ஓரெழுத்து ஒருமொழி ஆகும்.
  **எ.கா.**மாநாடு, மாநகரம், அரிமா, பரிமா, ஆமா
- ‘ஈ’ பொதுப்பெயர் ஓயாது ஒலி செய்யும் ஒலிக்குறிப்பைக் காட்டினாலும், மாட்டு ஈ, தேன் ஈ என பகுக்கப்படுகிறது. கொடுத்தலை ‘ஈக’ என்றும் சொல்வதுண்டு.
- போ, வா, நீ, சூ, சே, சை, சோ இவை போன்றவை இக்கால வழக்கில் பெரிதும் பயன்படுத்தும் ஓரெழுத்து ஒருமொழியாகும்.
- ‘ஆன்’ ‘ஆ’ என மாறியது, ‘மான்’ ‘மா’ என மாறியது. ‘கோன்’ ‘கோ’ என மாறியது பற்றி நாம் அனைவரும் நன்கு அறிவோம்.
- ஏ என்பதற்கு எய்தல் என்று பொருள். அதிலிருந்தே ஏகலை, ஏவலன், எயினர், எயினியர் என்னும் சொற்கள் உருவாகி நின்றன.
- இவ்வாறு ஓரெழுத்து ஒருமொழி திரிந்தும், வளர்ந்தும், புணர்ந்தும், தனித்தும் இன்றளவும் வழக்கத்தில் உள்ளதை இளங்குமரனார் விளக்கமாக இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

## தெரிந்து தெளிவோம் (பக்கம்.14)

**ஓரெழுத்து ஒருமொழிகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உயிர் எழுத்து | - | ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ | ககர வரிசை | - | கா, கூ, கை, கோ |
| மகர வரிசை | - | மா, மீ, மு, மே, மை, மோ | சகர வரிசை | - | சா, சீ, சே, சோ |
| தகர வரிசை | - | தா, தீ, தூ, தே, தை | வகர வரிசை | - | வா, வீ, வை, வெள |
| பகர வரிசை | - | பா, பூ, பே, பை, போ | யகர வரிசை | - | யா |
| நகர வரிசை | - | நா, நீ, நே, நை, நோ | குறில் எழுத்து | - | நொ, து |

## கற்பவை கற்றபின் (பக்கம்.16)

1. **ஓரெழுத்து ஒரு மொழிகள் இடம் பெறுமாறு ஐந்து தொடர்கள் எழுதுக.**
   - கனமான பொருளைக் கீழே வை
   - நாளைக்குச் சீக்கிரம் போ
   - எனக்குப் புத்தகம் தா
   - பொங்கல் பண்டிகை கொண்டாடும் மாதம் தை
   - எங்கள் செடியில் பூத்த பூ ரோஜா

# கூடுதல் வினாக்கள்

## கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. காட்டுப் பசுவுக்கு ................ என்று பெயர். **[ஆமா]**
2. முள்ளம்பன்றியில் பழம் பெயர் ................ **[எய்ப்பன்றி]**
3. செந்தமிழ் அந்தணர் என்று அழைக்கப்படுபவர் ................ **[இரா.இளங்குமரனார்]**
4. இரா.இளங்குமரனார் தொகுத்த நூலின் பெயர் ................ **[தேவநேயம்]**
5. திருச்சிக்கு அருகில் ................ 'திருவள்ளுவர் தவச்சாலையும்', 'பாவாணர் நூலகமும்' அமைத்தவர் இரா.இளங்குமரனார். **[அல்லூரில்]**

## ஓரிரு வரிகளில் விடையளி

1. **தமிழின் பெருமை யாது?**
   - தமிழ்மொழி செந்தமிழாகவும் செழுந்தமிழாகவும் உயிரோட்டத் தமிழாகவும் இருந்து வருவதே தமிழின் பெருமை ஆகும்.
2. **சொல் என்பதற்கு வேறு பொருள் எவை எவை?**
   - சொல் என்பதற்கு வேறு பொருள் மொழி, நெல் என்பதாகும்.
3. **'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்று கூறியவர் யார்?**
   - தொல்காப்பியர் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்று கூறினார்.
4. **மொழி எத்தனை வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது? அவை யாவை?**
   - மொழியை மூன்று வகையாக பிரித்துள்ளனர். அவை: 1. ஓரெழுத்து ஒருமொழி, 2. ஈரெழுத்து மொழி, 3. இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துகள் உடைய மொழி.
5. **ஓரெழுத்து ஒருமொழியில் இடம்பெறும் எழுத்துகளின் எண்ணிக்கை எத்தனை?**
   - ஓரெழுத்து ஒரு மொழியில் இடம்பெறும் எழுத்துகளின் எண்ணிக்கை 42 (நாற்பத்து இரண்டு) ஆகும்.
6. **இரா.இளங்குமரனார் ஆற்றிய பணிகள் எவை எவை?**
   - பள்ளி ஆசிரியராக, நூலாசிரியராக, இதழாசிரியராக, உரையாசிரியராக, தொகுப்பாசிரியராகப் பன்முகத் திறன் பெற்றவர்.
7. **இளங்குமரனார் இயற்றிய நூல்களை எழுதுக.**
   - இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம் ஆகியவை இளங்குமரனார் இயற்றிய நூல்களாகும்.

கற்கண்டு

இயல் ஒன்று

# எழுத்துகளின் பிறப்பு

| | |
|---|---|
| நோக்கம் | ➢ சொற்களின் பிறப்பு முறைகளை அறிந்து உரிய முறையில் ஒலித்தல்.<br>➢ உரிய ஒலிப்பு முறை மூலம் எழுத்துகளை பொருள் வேறுபாட்டிற்கு இணங்கப் பயன்படுத்துதல். |

## மதிப்பீடு (பக்கம்.19)

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **உதடுகளைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் ..................**

   அ) இ, ஈ  ஆ) உ, ஊ  இ) எ, ஏ  ஈ) அ, ஆ  **[ஆ) உ, ஊ]**

2. **ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ..................**

   அ) மார்பு  ஆ) கழுத்து  இ) தலை  ஈ) மூக்கு  **[இ) தலை]**

3. **வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் ..................**

   அ) தலை  ஆ) மார்பு  இ) மூக்கு  ஈ) கழுத்து  **[ஆ) மார்பு]**

4. **நாவின் நுனி அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் ..................**

   அ) க், ங்  ஆ) ச், ஞ்  இ) ட், ண்  ஈ) ப், ம்  **[இ) ட், ண்]**

5. **கீழ்இதழும் மேல்வாய்ப்பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்து ..................**

   அ) ம்  ஆ) ப்  இ) ய்  ஈ) வ்  **[ஈ) வ்]**

### பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| க், ங் | - | நாவின் இடை, அண்ணத்தின் இடை | **நாவின் முதல், அண்ணத்தின் அடி** |
| ச், ஞ் | - | நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி | **நாவின் இடை, அண்ணத்தின் இடை** |
| ட், ண் | - | நாவின் முதல், அண்ணத்தின் அடி | **நாவின் நுனி, அண்ணத்தின் நுனி** |
| த், ந் | - | நாவின் நுனி, அண்ணத்தின் நுனி | **நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி** |

## சிறுவினா

1. **எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?**

   - உயிரின் முயற்சியால் உடலின் உள்ளிருந்து எழும் காற்றானது மார்பு, தலை, கழுத்து, மூக்கு ஆகிய நான்கு இடங்களுள் ஒன்றில் பொருந்தி, இதழ், நாக்கு, பல், மேல்வாய் ஆகிய உறுப்புகளின் முயற்சியினால் வேறுவேறு ஒலிகளாகத் தோன்றுகின்றன. இதனையே எழுத்துகளின் பிறப்பு என்பர்.

2. **மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?**

   - வல்லின மெய் எழுத்துகள் மார்பை இடமாகவும்,
   - மெல்லின மெய் எழுத்துகள் மூக்கை இடமாகவும்,
   - இடையின மெய் எழுத்துகள் கழுத்தை இடமாகவும் கொண்டு பிறக்கின்றன.

3. **ழகர, லகர, ளகர மெய்களின் முயற்சிப் பிறப்பு பற்றி எழுதுக.**

   - ழகரம் மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால் பிறக்கின்றன.
   - லகரம் மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் ஓரங்கள் தடித்து நெருங்குவதால் பிறக்கிறது.
   - ளகரம் மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுதலால் பிறக்கிறது.

## கற்பவை கற்றபின் (பக்கம்.19)

'ஆய்தம்' இச்சொல்லில் உள்ள ஒவ்வோர் எழுத்தின் வகையையும், அது பிறக்கும் இடத்தையும் பட்டியல் இடுக.

| எழுத்துகள் | ஆ | ய் | த | ம் |
|---|---|---|---|---|
| வகை | உயிரெழுத்து | இடையினம் | வல்லினம் | மெல்லினம் |
| பிறக்கும் இடம் | கழுத்து | கழுத்து | மார்பு | மூக்கு |

# கூடுதல் வினாக்கள்

## கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. உயிரெழுத்துகள் பன்னிரண்டும் ................. இடமாகக் கொண்டு பிறக்கின்றன. **[கழுத்தை]**
2. வல்லின எழுத்துகள் ................. இடமாகக் கொண்டு பிறக்கின்றன. **[மார்பை]**
3. வாய் திறத்தலாகிய முயற்சியில் பிறக்கும் எழுத்துகள் ................. **[அ, ஆ]**
4. மேல்வாய்ப்பல்லின் அடியை நாக்கின் நுனி பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் ................. **[த், ந்]**
5. ஆய்தம் ................. எழுத்துகளின் வகையாகும். **[சார்பு]**

## பொருத்துக.

| எழுத்துகள் | | | பிறக்கும் இடம் | |
|---|---|---|---|---|
| அ. | வல்லினம் | - | 1. | தலை |
| ஆ. | மெல்லினம் | - | 2. | மார்பு |
| இ. | இடையினம் | - | 3. | மூக்கு |
| ஈ. | ஆய்தம் | - | 4. | கழுத்து |

**விடை: அ - 2, ஆ - 3, இ - 4, ஈ - 1**

## ஓரிரு வரிகளில் விடையளி

1. **எழுத்துகள் பிறக்கும் இடங்கள் எவை எவை?**
   - மார்பு, தலை, கழுத்து, மூக்கு ஆகிய உறுப்புகளிலிருந்து எழுத்துகள் பிறக்கிறது.
2. **எவற்றின் முயற்சியால் எழுத்துகள் பிறக்கின்றன?**
   - இதழ், நாக்கு, பல், மேல்வாய் ஆகிய உறுப்புகளின் முயற்சியால் எழுத்துகள் பிறக்கின்றன.
3. **எழுத்துகளின் பிறப்பினை எத்தனை வகையாகப் பிரிப்பர்? அவை யாவை?**
   - எழுத்துகளின் பிறப்பினை இரண்டு வகையாகப் பிரிப்பர் அவை: இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு ஆகும்.
4. **இதழ்கள் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகளைக் குறிப்பிடுக.**
   - இதழ்கள் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகும்.
5. **ர், ழ் எவ்வாறு பிறக்கின்றன?**
   - மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால் ர், ழ் ஆகிய எழுத்துகள் பிறக்கின்றன.





# மொழியை ஆள்வோம் (பக்கம்.20)

## கேட்க

**தமிழ்மொழியை வாழ்த்திப் பாடிய வேறு கவிஞர்களின் பாடல்களைக் கேட்டு மகிழ்க.**

தமிழே ஆதித் தாயே வாழ்க!
தமிழர்க் கெல்லாம் உயிரே வாழ்க!
தமிழ் நாட்டுக்கும் பிற நாட்டுக்கும்
அமிழ்தாய் அமைந்த அம்மா வாழ்க!

- பாரதிதாசன்

## கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.

**தமிழ் எழுத்துகளின் தோற்றமும் வளர்ச்சியும்.**

''கல் தோன்றி மண் தோன்றா காலத்தே
முன் தோன்றிய மூத்த குடி நம் தமிழ்க் குடி''

இத்தகைய பழம்பெருமை மிகுந்தது நம் தமிழ்க்குடி ஆகும். தமிழ்க்குடியின் பழம்பெருமை போன்றே தமிழ்மொழியும் பழம்பெருமை வாய்ந்தது.

கி.பி. 2ஆம் நூற்றாண்டிலேயே முழுமையான தமிழ் இலக்கண நூல் தோன்றியது என்றால், மொழி என்று தோன்றியது என்று யாராலும் கூற இயலாது.

தமிழன் உணர்வு உடையவன். தன் கருத்துகளை, உணர்வுகளை சைகை மூலம் வெளிப்படுத்தினான். அதன் பிறகு குறியீடுகளால் வரைந்து காட்டினான்.

இன்று நம் தமிழ்மொழி ஒலிவடிவம், வரிவடிவம் பெற்று உலக மொழிகளில் செம்மொழியாக அமர்ந்து சிறப்புடன் திகழ்கிறது.

கி.மு. 3 ஆம் நூற்றாண்டு முதல் அவன் எழுதிய எழுத்து வடிவம் பாறைகளில் அடையாளமாக காட்டி நிற்கின்றன. வட்டெழுத்துகளைத் தொடர்ந்து, தமிழெழுத்துகள் உருவாயின.

எழுத்துச் சீர்த்திருத்தங்களால் வளர்ச்சி பெற்று தமிழ் நாள்தோறும் புதுப்பொலிவுடன் பைந்தமிழாக திகழ்ந்து விளங்குகிறது.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று பாடிய பாரதியின் கூற்று உண்மையிலும் உண்மை. உலக மொழிகள் பலவற்றைக் காட்டிலும் இனிமையும், பெருமையும், செழுமையும் நிறைந்த மொழியை நாமும் போற்றுவோம்!

## சொல்லக்கேட்டு எழுதுக.

உலக மொழிகளின் எழுத்து வரலாற்றை உற்று நோக்கினால் சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை அறியலாம். அவை ஒரு வரிவடிவத்தை விட்டு மற்றொரு வரிவடிவத்தை ஏற்றுக் கொள்ளுதல்; இருக்கின்ற வரிவடித்தில் திருத்தம் செய்து கொள்ளுதல்; எழுத்து எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ளுதல் ஆகியனவாகும். வரிவடிவ மாற்றம், வரிவடிவத் திருத்தம், எழுத்துகளின் எண்ணிக்கை மாற்றம் ஆகியவற்றை எழுத்துச் சீர்திருத்தம் என்று குறிப்பிடுகிறோம்.

## அகரவரிசைப்படுத்துக.

எழுத்து, ஒலிவடிவம், அழகுணர்ச்சி, ஏழ்கடல், இரண்டல்ல, ஊழி, உரைநடை, ஔகாரம், ஓலைச்சுவடிகள், ஆரம்நீ, ஈசன், ஐயம்.

**அழகுணர்ச்சி, ஆரம்நீ, இரண்டல்ல, ஈசன், உரைநடை, ஊழி, எழுத்து, ஏழ்கடல், ஐயம், ஒலிவடிவம், ஓலைச்சுவடி, ஔகாரம்.**

---

## கட்டுரை எழுதுக.

### எனது தாய் மொழி

**முன்னுரை**

மொழி என்பது மனித சமூகத்தின் முக்கியமான கூறுகளில் ஒன்றாகும். ஒரு சமூகத்தின் கலாச்சாரம், பாரம்பரியம், பழக்கவழக்கங்கள் அனைத்தையும் மொழி தாங்கி நிற்கிறது. எனது தாய்மொழி தமிழ் என்பதில் நான் பெருமைப்படுகின்றேன்.

**தாய்மொழி**

சிறு வயதில் முதன்முதலில் கற்கும் மொழியே தாய்மொழி. குழந்தைக்கு அதன் தாய் கற்றுத் தரும் மொழியே தாய்மொழி. குழந்தையின் உதடுகள் உச்சரிக்கும் முதல் மொழியே தாய்மொழி. தாய்மொழி என்பது தாய் சொல்லித்தந்த மொழியன்று. தாய்மை உணர்வோடு பயன்படுத்த வேண்டிய மொழி என்றார் பாரதியார்.

**தொன்மை**

தமிழ் மொழி உலகில் பழமையான மொழிகளில் ஒன்றாகும். இம்மொழியின் அழகு மற்றும் தனித்தன்மையைச் சொல்வதற்கான வார்த்தைகள் குறைவே. இவள் என்று பிறந்தவள் என்றுணராத இயல்பினளாம் எங்கள் தாய் என்று பாடுகிறார் பாரதியார். என்று முள தென்தமிழ் என்று கம்பர் கூறுவதிலிருந்து தமிழின் தொன்மைச் சிறப்பை உணரலாம்.

**இனிமையான மொழி**

தமிழ் மொழி இலக்கியம், கவிதை, கதை, பாடல்கள் ஆகியவற்றின் மூலம் மிகுந்த செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளது. சங்ககால இலக்கியங்கள் முதல் சமீபத்திய நவீன இலக்கியங்கள் வரை, தமிழ் மொழி தனது ஆழமான பொருள்கள் மற்றும் வண்ணமயமான வார்த்தைகளால் மக்களின் மனதைக் கவர்ந்த இனிமையான மொழி தமிழ்.

**உயிருக்கு நேரான மொழி**

எனது தாய்மொழி எனக்கு மிகுந்த செல்வாக்கு, அடையாளத்தை அளிக்கிறது. உலகம் முழுவதும் பரவியுள்ள தமிழர்கள் மொழியைப் பேசி, எழுதிக் கொண்டு இருப்பது பெருமை அளிக்கிறது. மொத்தத்தில், எனது தாய்மொழி தமிழ் எனக்கு வாழ்வில் பல நன்மைகளை அளித்து வருகிறது. அதனால், என் தாய்மொழி மீது எனக்கு மிகுந்த மரியாதையும், பெருமையும் உள்ளது. தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்று உணர்ந்து பாடினார் பாரதிதாசன்.

**முடிவுரை**

உலகின் பல மொழிகள் தோன்றும் முன் இலக்கணம், இலக்கியம் என படைத்து இவ்வுலகிற்கு அளித்த மொழி தமிழ். பிறமொழிக் கலப்பின்றி தனித்து இயங்கும் தன்மை கொண்ட மொழி. தாய்மொழிகளுக்கெல்லாம் தாயாய் அமைந்த மொழிதான் எனது தாய்மொழி தமிழ்.

## மொழியோடு விளையாடு (பக்கம்.21)

### பொருத்தமான பன்மை விகுதியைச் சேர்த்து எழுதுக.

கல், பூ, மரம், புல், வாழ்த்து, சொல், மாதம், கிழமை, ஈ, பசு, படம், பல், கடல், கை, பக்கம், பா

| கள் | க்கள் | ங்கள் | ற்கள் |
|---|---|---|---|
| வாழ்த்துகள் | பூக்கள் | மரங்கள் | கற்கள் |
| கிழமைகள் | ஈக்கள் | மாதங்கள் | புற்கள் |
| கடல்கள் | பாக்கள் | படங்கள் | சொற்கள் |
| கைகள் | பசுக்கள் | பக்கங்கள் | பற்கள் |

### ஒரு சொல் ஒரே தொடரில் பல பொருள் தருமாறு எழுதுக.

**(எ.கா.) அணி** - பல அணிகளை அணிந்த வீரர்கள், அணிஅணியாய்ச் சென்றனர்.

படி - பள்ளிக்கூடப் படியை மிதித்து, நாள்தோறும் கல்வியை கருத்தெனப் படித்து வாழ்ந்தால் வாழ்வில் படிப்படியாய் முன்னேறலாம்.

**திங்கள்** - **திங்கள்** இதழில் பிறைத்**திங்கள்** குறித்து விளக்கமாக கட்டுரை எழுதப்பட்டிருந்ததை **திங்கள்**கிழமை வழிப்பாட்டுக்கூட்டத்தில் தலைமையாசிரியர் தெரிவித்தார்.

ஆறு - ஆறு நாட்களாக பெய்த கனமழையால் ஆறுகள் எல்லாம் பெருக்கெடுத்து ஓடின.

### கீழ்க்காண்பவற்றுள் ஒரு சொல்லை எடுத்து ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களுடன் இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மா | தேன் | மலர் | செம்மை | சிட்டு | கனி |
| குருவி | இலை | காய் | கூடு | முட்டை | மரம் |

**(எ.கா.) சிட்டுக்குருவி**

தேன்கூடு, குருவிக்கூடு, மாமரம், மாஇலை, மாங்காய், மாங்கனி, குருவிமுட்டை, தேன்கனி, தேன்சிட்டு

### சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக.

1. **வட்டெழுத்து எனப்படும் தமிழ் கோடுகளால் வளைந்த அமைந்த எழுத்து.**
   வளைந்த கோடுகளால் அமைந்த தமிழ் எழுத்து வட்டெழுத்து எனப்படும்.
2. **உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ளவரையிலும்.**
   உலகம் உள்ளவரையிலும் தமிழ்மொழி வாழட்டும்.

3. **பொருள்பட இரு சிலேடை ஆகும் இலக்கியம் பாடும்.**

   இருபொருள்பட பாடும் இலக்கியம் சிலேடையாகும்.

4. **கழுத்து பிறக்கும் இடம் உயிரெழுத்து ஆகும்.**

   உயிரெழுத்து பிறக்கும் இடம் கழுத்து ஆகும்.

5. **ஏகலை கலையை அம்புவிடும் தமிழ் என்றது.**

   தமிழ், அம்புவிடும் கலையை ஏகலை என்றது.

## நிற்க அதற்குத் தக..

**என் பொறுப்புகள்.**

1. எழுத்துகளைச் சரியான வரிவடித்தில் எழுதுவேன்.
2. அறிவிப்புப் பலகைகளில் உள்ள பிழைகளை உரியவரிடம் கூறித் திருத்தச்செய்வேன்.

## படிப்போம்; பயன்படுத்துவோம்!

| | | | |
|---|---|---|---|
| ஒலிபிறப்பியல் | Articulatory phonetics | உயிரொலி | Vowel |
| மெய்யொலி | Consonant | அகராதியியல் | Lexicography |
| மூக்கொலி | Nasal consonant sound | கல்வெட்டு | Epigraph |
| சித்திர எழுத்து | Pictograph | சிலேடை | Pun |



## அலகுத்தேர்வு வினாத்தாள் இயல் - 1

வகுப்பு : 8 மதிப்பெண் : 25

பாடம் : தமிழ் நேரம் : 45 நிமிடங்கள்

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **3**

1. **அறிந்தது + அனைத்தும் - என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ............ .**

   அ) அறிந்ததுஅனைத்தும் ஆ) அறிந்தனைத்தும்

   இ) அறிந்ததனைத்தும் ஈ) அறிந்துனைத்தும்

2. **பெரிய கப்பல்கள் ............ மீது செல்லும்.**

   அ) ஊழி ஆ) ஆழி இ) நாழி ஈ) தாழி

3. **வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து............ அழைக்கப்படுகிறது.**

   அ) கோட்டெழுத்து ஆ) வட்டெழுத்து இ) சித்திர எழுத்து ஈ) ஓவிய எழுத்து

**ஆ. குறுவினா** 6

1. ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?
2. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக்கொண்டு பிறக்கின்றன?
3. தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?

**இ. சிறுவினா** 4

1. தமிழையும் கடலையும் ஒப்பிட்டுத் தமிழழகனார் கூறுவன யாவை?

**ஈ. நெடுவினா** 8

1. தமிழில் ஓரெழுத்து ஒரு மொழியின் பெருக்கம் குறித்து இளங்குமரனார் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**உ. அடிபிறழாமல் எழுதுக.** 4

1. வாழ்க நிரந்தரம் எனத் தொடங்கும் மனப்பாடப்பாடலை எழுதுக.

விழித்துக் கொண்டிருக்கும் நேரமெல்லாம்
படித்துக் கொண்டிருப்போம்

## எமது வெளியீடுகள் (STATE BOARD)

- 6th to 12th Std - **STEP TO SUCCESS ENGLISH**
- 10th to 12th Std - **ELITE ENGLISH**
- 6th to 12th Std - **உன்னால் முடியும் தமிழ்**
- 10th to 12th Std - **அமுத சுரபி தமிழ்**
- 6th to 10th Std - **சமுகஅறிவியல்** (Tamil & English Medium)
- 8th to 10th Std - **அறிவியல்** (Tamil & English Medium)


**டால்பின் பப்ளிகேசன்ஸ்®**

239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.

**Cell : 98653 06197 / 89256 77710 / 99435 67646**
**93453 14146 / 93453 30937**

Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.com

ICICI Bank iMobile | BHIM | pockets

Merchant Name : DOLPHIN PUBLICATIONS
Mobile Number : 8668163362

Steps to Pay UPI QR Code
Open UPI app > Select 'Tap to Pay' > Scan QR Code > Enter Amount

G Pay **94427 17794**
**63743 17883**